# தமிழரின் வினைக் கோட்பாடு



தமிழண்ணல்

# தமிழரின்

# வினைக் கோட்பாடு

தமிழண்ணல்

**மதுரைத் திருவள்ளுவர் கழகம்**

வடக்காடி வீதி

மீனாட்சி சுந்தரர் திருக்கோவில்,

மதுரை – 625 001.

முதற்பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2043, தைத் திங்கள்
(பிப்பிரவரி, 2012)

விலை ரூ : **10.00**



இந்நூலை வெளியிட
ஏரியூர் மு.ஆ.பெரி.சுப. இராமசாமி செட்டியார்
பெயரிலமைந்த அறக்கட்டளை உறுதுணை செய்தது

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின்
70ஆம் ஆண்டு நிறைவு விழாவில்
திருவள்ளுவர் ஆண்டு 2043, தைத் திங்கள்
இரண்டாம் நாள் (16-01-2012)
திங்கட் கிழமையன்று காலையில்
தமிழண்ணல் **"சேக்கிழாரின் திருவுள்ளம்"**
என ஆற்றிய உரையின் நூல் வடிவம்.

ஒளி அச்சுக் கோவை : ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை

அச்சிட்டோர் : கணபதி பிராசஸ், சென்னை-5.

# தமிழரின் வினைக் கோட்பாடு

உலகம் முழுவதற்குமான சிந்தனைகளில் இவ்வினைக் கோட்பாடும் ஒன்று. "தமிழர் சமயம்" என்பது தொடக்க காலத்தில் சிவநெறி (குறிஞ்சி), திருமால் நெறி (முல்லை), கொற்றவை நெறி (பாலை நிலம்) என்பனவாகும். பிறயாவும் சடங்குகளின் அளவில் நின்றன; சமய உருப்பெற வில்லை. கொற்றவை எனும் அம்மன் வழிபாடும் சிவநெறியில் இணைந்தது.

ஆகத் "தமிழர் சமயம்" என்பது சிவனியம், மாலியம் எனத் தொடங்கி, பின்னர் வடமொழிக் கலப்புற்று, ஆயிரம் திரிபுகளுக்கு ஆட்பட்டு விட்டது.

சிவனியம் எனும் சைவ சமயத்தின் வேரும் விழுதும் தொல்காப்பியம் முதல் தமிழில் உள. ஆனால் இடைக்காலத்தே, வடமொழி வல்லாண்மை மிக்கு, தமிழில் இருந்த அனைத்தும் சமஸ்கிருதமயமாக்கப்பட்டன.

சைவ சித்தாந்தம் என்ற பெயர் முதல், ஒரு சொல் கூடத் தமிழல்லாமல் போனது கருதத்தக்கது. பதி, பசு, பாசம்; பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் எனக் கூறிப் பாருங்கள்; இவற்றின் விளக்கங்களையும் படித்துப் பாருங்கள். இவை ஒரு சிறு கூட்டத்தாருக்கு மட்டும் விளங்கினாற் போதுமா? பொதுமக்கள், இளைஞர், மகளிர் உட்பட அனைவருக்கும் விளங்கும்படி, தமிழில் இருந்தாலல்லவா அனைவருக்கும் போய்ச்சேரும்.

கா.சு.பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருப்பது போல 'இந்துமதம்' என்ற பெயரை உண்டாக்கி, தமிழர் சமயங்களை வைதிகத்துடன் இணைத்ததால் சிவமதம், மால்மதம் (சைவம், வைணவம்) என்ற பெயர்கள் தாமும் உலகிடை வழங்காமல் விளங்காமல் போயின.

நமது திருமடங்களும் சிவநெறி மன்றங்களும் இவை அனைத்தையும் மூன்று நிலைகளில், முற்றிலும் தமிழாக மீட்டுருவாக்கம் செய்திருக்க வேண்டும்; செய்ய வேண்டும்.

1. அனைவருக்கும் விளங்கும்படியான எளிய விளக்கம்.

2. ஓரளவு கற்றவர்களுக்கான அடுத்த நிலை விளக்கம்

3. ஆழமான, நுட்பம் மிக்க ஆராய்ச்சி விளக்கம்.

இத்தகைய தமிழுக்கான நிலை பேறுள்ள பணிகளைச் செய்யாமல், 'சிவ மெய்யியல் தமிழன் உலகிற்கு வழங்கிய கொடை' என்று ஜ.யு.போப்பையர் கூறிவிட்டார் என முழங்குவது பெருமை தருமா? சிவனியத்தின் அடிப்படைக் கோட்பாடு மூன்று : 1. முப்பொருளுண்மை 2.வினைக் கோட்பாடு 3. உருவ வழிபாட்டுப் பத்திமை நெறி.

இவை சமயநெறிகள் என்பதை விட, உலகப் பொதுவான உண்மை நெறிகள் எனலாம். தமிழர் சமயநெறி தன் முன்னேற்றச் சிந்தனை நெறியாகும். இவற்றை வரலாற்றுப் பார்வை, வாழ்வியல் பார்வை, மெய்யியல் – தத்துவப் பார்வை எனும் மூன்று நெறிகளில் தேட வேண்டும். இன்று 'தத்துவப் பார்வை'யோடு நின்று விடுகின்றனர். அதனால் மக்களின் அன்றாட வாழ்வுடன் சமயம் ஒட்டவில்லை.

இவற்றுள் 'வினைக் கோட்பாடு' என்பதை ஒரு சமயம் சார்ந்ததாகக் கருதக் கூடாது. இது உலகப் பொதுவானது. அனைத்து நாடுகள், மொழிகள், இனங்கள், சமயங்கள் யாவும் ஏற்க வேண்டிய ஒன்று.

**மனிதமனம்**

மனிதமனம் இயல்பாகத் தீயபக்கம் சாரும் இயல்புடையது. வீட்டில் குப்பை சேர்கிறது; அதை நாள்தோறும் கூட்டித் தூய்மை செய்கிறோம். மனித உடலில் அழுக்குப் படிவது அதன் இயல்பு. அதனால் நாள்தோறும் குளித்துத் தூய்மை செய்துகொள்கிறோம். அது போன்றதே மனித மனத்தில் மாசுபடர்வதும் இயற்கை வழிப்பட்டது. வீடு, உடல் இரண்டையும் போல, மனத்தையும் நாள்தோறும் சேரும் மாசினை நீக்கித் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். திருவள்ளுவர் இதை மன அழுக்கு, மன மாசு என்று குறிப்பிடுவார். 'மனத்தூய்மை' பற்றிப் பல குறள்கள் உள.

எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும்; தவறான வழியாயினும் மறைவாகச் செய்தேனும் பிறரைவிடச் செல்வராக வேண்டும். சட்டத்திற்கு அகப்படாமல், பிறர்க்குத் தெரியாமல், மறைவாக என்ன செய்தேனும் மனித மனம் தன்னலம் தேடவே முந்துகிறது.

மிகப் பெருஞ்செல்வர்களான பலரது வாழ்வைத் தோண்டித் துருவிப் பார்த்தால், இத்தகைய கசடுகள் ஒரு சுரங்கத்திலிருந்து வெளிப்படுவது போல், வெளிவரும்.

உலகம் ஒளியும் இருளும் போல், நன்மையும் தின்மையும் கொண்டுள்ளது. இவற்றைப் பிரித்தறிவது கடினமாகவுளது. 'மனநலம்

மன்னுயிர்க்கு ஆக்கம்'. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்'. நம் செயல், வாக்கு, உள்ளம் மூன்றும் தூயதாக இருப்பின் உலகம் உய்யும். வெளியே நல்லவர் போல் இருப்பவரின் ஆழ்மனம் அத்தனை கேடுகளும் உள்ளதாக இருக்கக் கூடும்.

நல்லது தான் நன்மை பயக்கும்; தீமை தீயதைத்தான் வளர்க்கும். 'தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்'. இது வெளிப்பேச்சுக்கு மட்டுமே பயன்படுகிறது.

ஒருவன் குறுக்கு வழியில் தீயனவே செய்து, பெரு வாழ்வு வாழ்வதைக் கண்ணெதிரே காண்கின்றோமே? கொலை செய்தவனை அரசு தண்டித்தாலும், அவன் அத்தீய செயலால் தீமை அடையாமல், செல்வம் சேர்க்கவும் ஆடம்பரமாக வாழவும் காண்கின்றோமே?

தீவினை மூலம் செல்வனானாலும் வேறு பட்டம், பதவி அடைந்தாலும் அவன் உடனுக்குடன் தண்டிக்கப் படக் காணவில்லையே?

நல்லவன் செல்வத்தை இழக்கிறான். அவன் நல்லவனாக வாழ்வதனாலேயே பல துன்பங்களை அனுபவிக்க நேர்கிறதே?

அதனால் நல்ல மனம், வாக்கு, செயலால் நன்மை விளையும் என்பதையும் தீயவற்றால் தீமையே விளையும் என்பதையும் கால்பங்கு நம்பினாலும், ஏனைய முக்காற் பங்கு இதற்கு மாறாக நடப்பதாகவும், அப்படி நடக்கலாம் என்பதையும், அப்படி நடப்பவர்களே நல்வாழ்வு வாழ்கின்றனர் என்பதையும் கண் கூடாகக் கண்டு தடுமாற நேர்கிறதே?

இவ்வாறு ஆயிரம் ஐயங்கள் உலக வாழ்க்கைச் சுழற்சியில் எழுவதால், நன்மையால் நன்மை விளையும் தீமை தீமையையே தரும் என்பதை நம்பி நடப்பவர்கள் தொகை மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது. தவறான வழி நடப்பவர்கள் தொகையே மிகுதியாக வளர்கிறது.

## பாவச் செயல்களும் பரிகாரமும்

இந்தியர்கள் தாங்கள் செய்யும் பாவச் செயல்களுக்குப் பரிகாரம் தேடுகிறார்கள். எவ்விதப் பாவச் செயலுக்கும் கொலை களவு காமம் என எதற்கும் கழுவாய் உண்டு; அது அதற்கு ஏற்பச் சில சடங்குகள், மந்திரங்கள், அருச்சனைகள், சாமிக்கு நன்கொடை, பொன் வயிர அணிகள், ஹோமங்கள், வேள்விகள் எனப் பணம் செலவழிக்க முடிந்தால் அனைத்துத் தோசங்களிலிருந்தும் விடுபட்டு விடலாம். அதே வழிகளில் புண்ணியத்தை வாங்கலாம் என நம்புகின்றனர்.

புரோகிதர்கள், சாதகம் பார்ப்பவர்கள், இராசி பலன் எழுதுபவர்கள் எல்லோரும் எத்தகைய தோசத்திற்கும் தீயசெயலுக்கும் 'பரிகாரம்' சொல்லி விடுகிறார்கள். இவை மூலம் பாவம் செய்ய, தீமை செய்ய அஞ்சவேண்டியதில்லை; எல்லாவற்றுக்கும் பணச்செலவே தவிரப் பரிகாரம் செய்து தப்பித்து விடலாம் என்ற நம்பிக்கை இந்திய மனத்தில் ஆழப்பதிந்து விட்டது.

ஏனைய சமயங்களும் மக்களை ஈர்ப்பதற்காக, 'எங்கள் சமயத்திற்கு மாறுங்கள், இறைவனிடம் மன்னிப்பு வாங்கித் தருகிறோம்' என்று பரப்புரை செய்கிறார்கள்.

வேத வைதிகம், இருக்கு வேதம் தொடங்கி, இப் 'பரிகாரம்' பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது. அதர்வண வேதம் முழுவதும் மந்திரங்கள், ஹோமங்கள், வேள்விகள் மூலம் பணம் செலவழித்துச் சில சடங்குகள் செய்து, செய்த பாவங்களிலிருந்து தப்பிக்க வழி காட்டுகிறது.

அதர்வண வேதம் பற்றி 'ஸ்வாமி' என்பார் எழுதி, அநுராகம் வெளியிட்டுள்ள, பத்து உருவா விலையுள்ள சிறுநூலை வாங்கிப் படியுங்கள், அனைத்து மாய மந்திரங்கள், ஏவல், பில்லி, சூனியம் எல்லாம் இதிலுள. "இதில் மாயவித்தை, மனித சக்திக்கு அப்பாற்பட்ட தீமைகளிலிருந்து காத்துக் கொள்ளும் வழிகள் பிராயச் சித்தங்கள் எல்லாம் உள்ளதால்..." என எழுதி, இதை அந்தணர்கள் தமக்குரிய தன்று என்று மறுத்தனர் என்றும் குறிப்பிடுகின்றார், ஸ்வாமி (பக்.6,7).

வேதங்கள் முதல் புராணங்கள், மனுஸ்மிருதி வரை படித்தால் வடமொழி நூல்களை, வருமானம் கருதிய புரோகிதப் பிராமணர்கள், பரிகாரக் களஞ்சியம் ஆக்கி விட்டனர் என்பது புலனாகும். இதில் வருமானம் தேடும் தமிழர்களுக்கும் பங்குண்டு. பகுத்தறிவு அந்தணர்கள் வேறு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

மனுஸ்மிருதி, சாதி குலத்திற்கேற்றபடி, பரிகாரம் கூறுகிறது.

இவற்றை அறவே எதிர்த்த சமணத்தையும் புத்தத்தையும் வைதிகம் வென்று, அவற்றை வளரவிடாமல் செய்தது.

காரணம் மனித மனம் தீமை செய்யவே முந்துகிறது; தீயவழிகளிலேனும் தான் வாழவே வழி தேடுகிறது; அவ்வாறு செய்தால், உனக்குத் தோசமோ, தீங்கோ வராமல் காப்பாற்ற நூறுவகைப் பரிகாரங்கள் உள; புண்ணியத்தை வாங்கவும் பல நூறு வழிகள் உள என்ற கருத்தைப் பரப்பியதால், மாந்த மனம் அவற்றில் ஈடுபட்டது. கொள்கை வழிச் சமயங்கள் வலுவிழந்தன.

பரிகாரம் என்பது என்ன? எதிர்பாராது தீங்கு நேரிட்டு விட்டால், தீய வழியில் நுழைந்து விட்டால் பிறகு அவற்றிலிருந்து தப்பிக்க வருந்த வேண்டும்; அழ வேண்டும்; திருந்த வேண்டும்; நன்மைக்கு மாற வேண்டும். பொதுவாக நல்ல மனம், நன்னடத்தை முதலியனவே பரிகாரமாகும். நல்ல வண்ணம் வாழ்ந்துதான் புண்ணியம் தேட வேண்டும். புண்ணியம் கடைச் சரக்கன்று, பணம் கொடுத்து வாங்க.

இங்கேதான் சிவநெறியாகிய தமிழர் நெறி பிற நெறிகளினின்று வேறுபடுகிறது. தமிழரின் வினைக் கோட்பாடு மிக ஆழமானது. நல்லது செய்தால்தான், நல்ல உள்ளம் வாய்த்தால்தான் நன்மை விளையும் என்ற இயற்கைத் 'தத்துவத்தை', இது அறிவியல் முறைப்படி விளக்கி நிறுவுகிறது. இதனை உலகம் முழுவதும் ஏற்றாலன்றி, உலகம் உய்யவேறு வழியில்லை.

### சேக்கிழார் திருவுள்ளம்

தமது திருத்தொண்டர் மாக்கதையினைச் சேக்கிழார் தொண்டர்தம் வரலாற்றைக் கூறுவதற்கு மட்டும் எனப் பாடவில்லை. திருமுறைப் பெருமைகளை விளக்கவும் சிவனிய மெய்யியல்களை – சைவ சித்தாந்தச் சாத்திர அடிப்படை உண்மைகளை உணர்த்தவும் எனப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

பிற காப்பியங்களில் நாட்டுப் படலம் நகரப் படலம் என வருவன வருணனைகளாக அமையும். சேக்கிழார் 'திருநாட்டுச் சிறப்பு' என்பதில், இயற்கைப்புனைவு, சோழ நாட்டுச் சிறப்பு என வருணனைகளாகவே பாடுகின்றார். அடுத்த 'திருநகரச் சிறப்பு' என்பதில், நம்பி ஆரூரர் பிறந்த திருவாரூர்த் திருநகர் பற்றிய சிறப்புக்களை வருணித்து விட்டு, அவ்வூரிலிருந்து ஆட்சி செய்த மனுநீதிச் சோழன் கதையை விரிவாக எடுத்தியம்புகிறார்.

இது புதுமையாக இருக்கிறது என்பது மட்டுமன்றி, சிவநெறி மெய்ம்மைகளில் ஒன்றான 'வினைக் கோட்பாட்டை' அழுத்தம் திருத்தமாக விளக்குவதாகவுளது.

சோழநாட்டில் 'மனு'ச்சக்கர வர்த்தி என்ற மன்னன், நீண்ட காலத்திற்கு முன் ஆண்டு வந்தான். அவன் அரண்மனை வாயிலில் 'ஆராய்ச்சிமணி' ஒன்றைத் தொங்க விட்டிருந்தான். குடிமக்கள் குறைவேண்டுவாரும் முறை நீதி வேண்டுவாரும், மணியை அடித்தால் அரசன் நேரில் வந்து, குறை தீர்த்தும் முறை வழங்கியும் மக்களாட்சி செய்து வந்தான்.

இம்மனுநூல் வடமொழியில் வழங்கும் மனு தரும சாத்திரத்தினின்றும் வேறுபட்டது. தமிழர் அறநூலாகிய மனுநூல் ஒன்றின்படி ஆட்சி செய்தான் என்று பெரிய புராணம் கூறுகிறது.

செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான்

வடமொழி மனுநீதி, வருணாசிரம அடிப்படையுடையது. சாதிக்கேற்ப, செய்த பாவங்கள் தீர, பரிகாரப் பலன்கள் கூறுவது. எவ்விதக் குற்றத்தையும் பணம் செலவழித்துச் சடங்குகள் செய்து, தீர்த்துக் கொண்டு விடலாம் என்ற, தொன்று தொட்டு வரும் வடமொழிக் கோட்பாட்டை, முழுமையாய் எடுத்தியம்புவது இந்நூல். அதற்கு மாறாக எழுந்த தமிழ் மனுநூலை 'செற்றம் நீக்கியது', 'நடுவுநிலை (செம்மை) சான்றது', என்றும் இதனையே 'மெய்ம்மனு' என்றும் கூறி, இச்சோழன் அதனையே தன் பெயராக ஆக்கிக் கொண்டான் என்று சேக்கிழார் கூறுவதால், அவரது திருவுள்ளம் வடமொழிக் கோட்பாட்டை விலக்கித் தமிழர் கோட்பாட்டை நிறுவ விரும்பியது என்ற உண்மை புலனாகிறது.

சிலப்பதிகாரத்திலும் இம் மனுநீதிச் சோழன் கதை வருவதால், இது மிகத் தொன்மை வாய்ந்த வரலாறு ஒன்றன் வழிவழி வந்த கதை என்று தெரிகிறது. தன் கணவன் குற்றமற்றவன் என்று, பாண்டிய மன்னன் எதிரே வழக்காடும் கண்ணகி முதலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது இதைக் கூறுகிறாள்.

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே

(வழக்குரை காதை 53-56)

கண்ணகி புகார் நகரைக் குறிப்பினும், இளங்கோவடிகள் இதனைச் சோழ மன்னர் வரலாறென்றே பதிவு செய்துள்ளது கருதத்தக்கது.

ஒருநாள் மனுநீதிச் சோழன் மகன், இளவரசாகும் அகவை எய்தியவன், நகர்வலமாகத் தேரில் வரும் போது, எதிர்பாராது யார் கண்ணிலும் படாது ஓர் ஆன் இளங்கன்று, தேர்ச்சக்கரங்களின் இடைப்புகுந்து, நசுக்குண்டு இறந்தது. இதனைக் கண்ட இளவரசன், இது தனக்கு மட்டுமன்றித் தன் தந்தைக்கும் பெரும்பழி தருமே என்று பதைபதைத்து அஞ்சுகின்றான். உடனே அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. புரோகிதப் பார்ப்பனர் இத்தகைய பழிகளைத் தீர்க்க பலவகைப் பரிகாரங்கள் செய்கின்றனர். இது நெடுங்காலமாக நடைபெற்று வருவதுதான். ஆகவே, தன் தந்தை அறியுமுன்னே இப்பழியை மாற்றுவன்என எண்ணித் 'திருமறையவராம் அந்தணரிடம்' செல்கின்றான்.

வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே யாகில்

எந்தை ஈது அறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன்
சிந்தைவெந் துயரம் தீர்ப்பான் திருமறையவர்முன் சென்றான்.

இளவரசனின் தமிழ் உள்ளம், 'இவ்வாறு ஆற்றுவது அறமே ஆகில்' என்று, ஐயத் தொனிபடவே எண்ணுகிறது.

இதற்கிடையே, உலக வியப்பென்று கூறுமாறு, கன்றை இழந்த பசு, அரண்மனை வாயிலிற் சென்று, ஆராய்ச்சி மணியை அடித்துவிடுகிறது. அதனால் அரியணையை விட்டு இறங்கி, வாயிலுக்கு வந்த மனுவேந்தன் நடந்ததைப் பலரும் கூற அறிகின்றான். அதைக் கேட்டதும் துடிதுடிக்கின்றான். கன்றை இழந்து துடிக்கும் பசுவைப் பார்த்து, மனம் நொந்து, வெந்து, 'என் செய்தால் இத்துயரம் தீரும்' எனப் புலம்புகின்றான்.

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்
சிந்தைதளர்ந்தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனை முன் கோவதை செய்தார்க்கு மறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம் என்றார்.

சேக்கிழார் பெருமான் உலகிடை வழங்கும் இரண்டு கோட்பாடுகளை வைத்து, அவற்றில் தமிழரின் கோட்பாடு எது என்று நிறுவ முயல்கின்றார்.

செய்த பாவங்கள் தீரவும் புண்ணியங்களை அடையவும் பணம் செலவழித்து, சடங்குகள் செய்து கொள்ளலாம் என்பது ஒரு கோட்பாடு. இதுவே உலகில் தீமை செய்வார், சிறிது பணம் செலவழித்தால் தப்பிவிடலாம் என்றும், எத்தீமையினின்றும் விடுபட ஆயிரம் சடங்குகள், ஹோமங்கள், யக்ஞங்கள் உள என்றும் நம்பி, அவற்றின்பால் சார்ந்து விழ வழி செய்கிறது.

மற்றொரு கோட்பாடு செய்த பாவம் தீர, அதை அனுபவித்தே தீர வேண்டும். எந்தத் தீவினையும் நல்வினையும் தத்தம் பயனைத் தந்தே தீரும். பணச் செலவு, சடங்குகளால் அவற்றைத் தீர்க்க முடியாது. வருந்துதல், திருந்துதல், அழுதல், நல்வழிக்குத் திரும்புதல் ஆகிய இவற்றால், தீவினைப்பயன் அழுத்தமாக விழுந்து அழிந்துவிடாமல், மீண்டும் உயிர்ப்புப் பெற்று உய்ய வழி தேடலாமேயன்றிச் செய்த வினையின் பயன், அதனை அனுபவித்துத் தீரும் வரை ஒருவனை விட்டு நீங்காது என்பது இது.

இவ்விரண்டிடையே ஒரு வழக்காடுமன்றம் நடத்தித் தீர்ப்பு வழங்குகிறார், சேக்கிழார் பெருமான்.

அமைச்சர்கள் முன்னைய கட்சி; அரசன் தமிழர் கோட்பாட்டுக் கட்சி.

அமைச்சர்கள், 'கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்தமுறை வழி நிறுத்தல் அறம்' என்றார்.

மறைவழி வந்த அந்தணர்கள் விதித்த முறைவழி அறம் இது. வெள்ளியினால், தங்கத்தினால் ஓர் ஆன் கன்றுபோல் செய்து, அந்தணர்க்குக் கொடுத்தால் தோசம் தீர்ந்துவிடும். அல்லது திருக்கோயில் கட்டலாம். சாமிகளுக்கு வயிர அணிகலன் முதல் ஏதேதோ செய்யலாம், ஒரு ஹோமம் நடத்தலாம், இலட்சம் ரூபாய் செலவழித்து யக்ஞங்கள் செய்யலாம். இவற்றால் தோசங்களினின்று நீங்கி, புண்ணியம் பெறலாம். இவற்றால் கன்னியர்க்குத் திருமணமாகும்; குழந்தைப் பேறு கிடைக்கும், தொழிலில் இலாபம் பெருகும், மந்திரி பதவியே கிடைக்கும் – என இவ்வாறான நம்பிக்கை அனைத்து மக்களிடமும் பரவியுள்ளது. நம்பிக்கையே வாழ்வாகிறது.

ஆனால் இவற்றுக்கு அப்பால் மனம் வாக்கு உடலால், தூயவர்களாக வாழ வேண்டும். தீமை செய்தால் தீமையே விளையும் என்பது மனத்தில் பதிய வேண்டும். தீயவை செய்ய அஞ்சவேண்டும். தீயவை செய்யலாம்; தப்பிக்கப் பலவழிகள் உள என்ற நெஞ்சுரம் வந்துவிடக் கூடாது. அதனால் மனுச்சக்கரவர்த்தி, அமைச்சர்கள் மீது கோபப்பட்டு, அவர்களை மறுத்துப் பேசுகிறான்.

**வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்**
**குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ?**
**இழக்கின்றேன் மைந்தனைஎன்று எல்லீரும் சொல்லியஇச்**
**சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ?**

பிறகு சோழ மன்னன் ஓர் அரசாள்பவனது ஐந்து கடமைகளைக் கூறுகிறான். தன்னாலோ, தன் அதிகாரிகளாலோ, பகையாலோ, கள்வராலோ, பிற கொடிய உயிரினங்களாலோ, மக்களுக்குத் தீங்கு நேராமல் காக்க வேண்டும். பிறன் ஒருவன் மற்றொரு உயிரைக் கொன்றால், அவனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கும் அரசனாகிய நான், என் மைந்தன் என்பதற்காக, அவ்விதியை மாற்றிக் கொள்வது அறமா என வினவுகிறான் அரசன்.

என் பெயர் மனு; நானே தொல்மனுத் தமிழ்நூலுக்கு எதிராகச் செயற்படலாமா எனக் கேட்கின்றான்.

**தொன்மனுநூல் தொடை மனுவால் துடைப்புண்டது எனும் வார்த்தை**
**மன்னுலகில் பெற மொழிந்தீர்! மந்திரிகள் வழக்கென்றான்.**

தொடை மனு – மாலையணிந்த மனு வேந்தன். மந்திரிகளுக்கு இதுதான் வழக்கம் என்று சினந்து பேசுகின்றான். ஆயினும் அமைச்சர்கள் தங்கள் கட்சியை விடவில்லை.

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதி அமைச்சர்
'நின்ற நெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தல் மரபன்று, மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ? தொல்நிலங் காவல' என்றார்.

'மறைமொழிந்த அறம் இது' என்பது காண்க. இதுவே தொன்று தொட்டு வரும் வழக்கென்றும் அமைச்சர்கள் கூறுகின்றனர். மனுநீதிச் சோழன் அவர்களின் பேச்சை ஏற்க வில்லை.

'அவ்வுரைகள் வருநெறிகள் அவை நிற்க' என அரசன் நயமாக மறுத்துவிடுவதாகச் சேக்கிழார் பெருமான் பாடுகிறார். அதுமட்டுமன்று, 'அறநெறியின் செவ்விய உண்மைத்திறம் நீர் சிந்தை செயாதுரைக்கின்றீர்' என்பது அரசன் கூற்று. முன்னதை நேரே மறுக்காமல், 'அவை போகட்டும்; அவை நம் நெறியன்று; அவற்றை நம்புவோர் நம்பட்டும், நாம் அவற்றுக்காக அறத்தைக் கைவிடலாகாது என எத்தனையோ கருத்துப்பட, 'அவை நிற்க' – என்று மன்னன் மொழிவதாக, நம் காப்பிய வேந்தர் கனிவுடன் பாடுகின்றார். 'அறநெறியின் செவ்விய உண்மைத்திறம் வேறு' என்பதால், முன்னது அத்தகைய தன்று என்று புலனாகிறது.

ஒருமைந்தன் தனக்குள்ளான் என்பதையும் நினையாமல், தன் மைந்தனைத் தானே தேரூர்ந்தான் என்று இது முடிகின்றது. இத்தகைய தொன்மங்கள், உண்மையை மறைமுகமாக உணர்த்த எழுந்தன என்பது மேனாட்டார் தரும் விளக்கம். செய்த வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்பதுதான் இதில் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம்.

### சிவநெறி மெய்ம்மை

#### திருக்குறள்

செய்தவினை நன்றோ, தீதோ உறுதியாகப் பயனுண்டு. உடனடியாகப் பயன்தருவனவும் உண்டு; காலங்கடந்து பயன்தருவனவும் உண்டு.

நியூடன் என்பார் ஆப்பிள் பழம் மரத்தை விட்டுக் கீழே விழுந்ததை அடிப்படையாக வைத்து, புவி ஈர்ப்பு விசை பற்றிக் கண்டறிந்தார் என்பர். திருவள்ளுவர் செய்த வினைக்கு விளைவுண்டு என்பதை,

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று (307)**

தரைமீது ஓங்கிக் கையால் அறைந்தால், அது வலியால் துன்புறுவது தப்பாதவாறு போல, சினத்தைத் தனக்கு ஆக்கம் தருவது என்று கொண்டவன் கெடுவது உறுதியாகும். வினைக்கு நிச்சயம் தவறாது– உறுதியாக எதிர்விளைவுண்டு என்பதை இதைவிட எளிமையாக விளக்க முடியாது.

நெருப்பு சுடும்; நீர் குளிரும். நல் உள்ளமும் நற்செயலும் நன்மை பயக்கும்; தீய உள்ளமும் தீய செயலும் தீமையைப் பயக்கும். இதுவே இயற்கையின் நியதி. தீயவை செய்வாரை, அச்செயலின் விளைவு விடாது தொடரும். அதிலிருந்து அவர் எவ்வாற்றானும் தப்பவே முடியாது. இதுவே தமிழரின் வினைக் கோட்பாடு.

**எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென்று அடும் (207)**

**தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை**
**வீயாது அடிஉறைந் தற்று (208)**

வீயாது – அழியாது, கெடாது, மாறாது தொடரும். இச் சொல் இரு குறள்களிலும் வருவது கொண்டு வள்ளுவப் பேராசானின் உள்ளத்தை அறியலாம். நிழல் போல, செய்தவனை விடாது தொடரும்.

தீவினைப்பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும். ஒருவன் நிழல் நெடிதாகப் போய், அவன் தன்னை விடாது வந்து, அடியின்கட் தங்கிய தன்மைத்து. இவை பரிமேலழகர் விளக்கம். இளங்கோவடிகள் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பார்.

உலகில் தீயவழியிற் பொருளீட்டி சுகவாழ்வு வாழ்பவரையும் நல்வழி ஒன்றையே நாடுவார் வறுமையுற்று வாடுவதையும் காண்கின்றோம். தீமை தீங்கு பயக்குமெனப் பலர் நம்பவே இல்லை. தீசுடும்தான்; ஆனால் அது சுடாது என்பது போலவே உலக மக்கள் நடைமுறைகள் உள. திருவள்ளுவரும்,

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும். (169)**

என்றுதான் கூறுகிறார். வெளியே தெரியும்படியான செயலைவிட, மக்கள் உள்ளத்தால் நினைக்கும் நன்மை தீமைகள் அடுக்கிய கோடியின. சமுதாயத் தீமை தனி மனிதனைப் பாதிக்கிறது. தனிமனிதத் தீங்குகள் சமுதாயத்தைத் தாக்குகின்றன. ஒருவன் நல்லது செய்ய, அவன் குடி தீமைவாய்ப்பட்டதால், அது அவனையும் தொடுகிறது. நன்மை தீமை விளைவும் அனுபவிப்பதும் கட்புலனாகாமலும் நடக்கின்றன; கண்ணுக்கு எதிரேயும் நடக்கின்றன. ஒருவன் நேரிய வழியில் காரோட்டிச் சென்றான்; எதிரே வந்தவன் தவற்றால் இவன் அடிபடுகின்றான். சில சமயம் ஒரே நேரத்தில், இயற்கை விளைவால், பல நூறு பேர் அழிகின்றனர். கொடிய நோய் பரவி, ஆயிரக்கணக் கானவரை அல்லற்பட வைக்கிறது. இவை யாவும் எவ்வாறு வினைக் கோட்பாட்டின் கீழ் வரும் என்ற ஐயம் எழும். எத்தகைய இயற்கைச் சீற்றங்களேயாயினும் எல்லாவற்றுக்கும் காரணகாரியத் தொடர்ச்சியுண்டு. நம்மால் கண்டு பிடிக்க முடியாததால், நன்மை,

தீமை அவ்வவற்றுக்கான நல்லதையும் அல்லதையும் விளைவிக்கும் என்பது பொய்க் கற்பனை என்று கூறிவிட முடியாது.

மனிதன் இயற்கையை அழிக்கின்றான். மரங்களை வெட்டுகின்றான். வயல்வெளிகளை எல்லாம் அடியொண்ட அழித்து, புல்கூடத்தலைகாட்டாதவாறு, காங்கிரீட்டுக் கட்டிடங்களாக மாற்றுகின்றான். மலைகள், குன்றுகளைப் பூமித்தாயின் மார்பகங்கள் என்பர். எதுவும் விளையாத சிறுசிறு குன்றுகளேயாயினும் அவை இயற்கையின் கொடை. மரங்களை வெட்டியவன், இப்போது மலைகளை அறுத்தெடுத்துப் பாளம் பாளமாக வெளிநாட்டுக்கு அனுப்புகின்றான். மணற் கொள்ளையால் ஆறுகள் வறண்டு, நிலத்தடிநீர் பறிபோகிறது.

உலகம் வெப்பமடைந்து கொண்டே வருகிறது. என்றேனும் வெப்பத்தால் பூமி வட்டமே எரிந்து, ஒட்டு மொத்தமாக அழிவுகள் நேரும் என எச்சரிக்கின்றனர். சுற்றுச் சூழல் மாசுத் தடுப்புப் பற்றி ஆயிரம் பேசுகின்றனர். ஆனால் அனைவருமே மாசுபடுத்தும் தீச்செயலைக் கை விடுவதாக இல்லை. மனமாசு படுத்தும் சுற்றுச்சூழல் கேடு திரைப்படத்தால், தொலைக் காட்சியால் இவை போன்ற ஊடகங்களால் நாளும் பரவிய வண்ணம் உள. ஆக ஒட்டு மொத்தமாகப் பலர் சேர்ந்து செய்யும் கேடு, ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாகப் பாதிப்பதைப் பார்க்கிறோம்.

சுருக்கமாக உலகிடைப் பல கோடி மக்கள் செய்யும் நன்மை தீமைச் செயல்களும் அவற்றின் விளைவுகளும் உருவமாகவும் (வெளிப்படவும்), அருவமாகவும் (மறைவாகவும்) நடப்பதால், 'ஏன் இந்த விளைவு' என்று, பல சமயங்களில் மனிதன் கண்பிடிக்க முடியாமல் திண்டாடுகிறான். இறுதியில் வேறு வழியின்றித் தலைவிதி இது என்று கூறி, மன அதிதி தேடுகிறான்; தலைவிதியை மாற்றப்பணம் செலவழித்தால் முடியுமா என அவன் முயல்வதற்கு அச்சமும் ஆசையுமே காரணங்களாகும். அதனால்தான் 'வினைக் கோட்பாட்டில்' தமிழர் சமயம் நன்மை தீமைகள் உறுதியாகத் தத்தம் எதிர்விளைவைத் தந்தே தீரும் என அழுத்தம் திருத்தமாகத் திரும்பத் திரும்பக் கூறியது.

வைதிகம் பரப்புரை செய்யும் பரிகாரம் என்பது வேதகாலத்திலிருந்து வருவது. அது புரோகித அந்தணர்களுக்கு வருமானம் தரும் தொழிலாகி விட்டது. மற்றபடி அவர்களும் உள்ளூற ஒப்பக் கூடியதே, இவ்'வினைக் கோட்பாடு' எனலாம். அண்ணா அசாரே குழுவினர் முயன்று, ஊழல் ஒழிப்புப்பற்றி எத்தனை சட்டம் வந்தாலும், இப் பரிகார நம்பிக்கை போகாதவரை, இந்திய நாடு ஊழலைக் கைவிடாது மட்டுமன்றி, மேன்மேலும் அழிவை நோக்கியே நகரும். சாமிகளுக்குச் செலவழித்தால் செலவின் அளவிற்கு ஏற்ப மந்திரி பதவியே கிடைக்கும் என்று அரசியல் வாதிகள் நம்புகின்றனர்.

அது ஒரு புறம் இருக்க, நல்லாட்சி செய்தால், சிறு அப்பழுக்கும் இன்றி மக்களிடையே நற்பெயரெடுத்தால் இவை அனைத்தும் கிடைக்கும் என இந்திய மனத்தில் விதைக்க வேண்டும். அதுவே உண்மையான நிலைத்த பயன்தரும்.

**கதிரை வேற்பிள்ளை தமிழ் அகராதி – வினைச் சுழற்சி**

| | | |
|---|---|---|
| பிரார்த்த கன்மம் | – | அனுபவ கன்மம். |
| பிரார்த்த கன்ம வாதனை | – | ஊழ்வினைப் பயன் |
| ஆகாமிய கன்மம் | – | மூவகைக் கன்மங்களுள் ஒன்று. அது வருத்தமான சனனத்தில் செய்யப்பட்டு, மறு சனனத்திற்கேதுவான கன்மம். |
| சஞ்சித கன்மம் | – | சென்ற சனனங்களிற் செய்யப்பட்டுப் பலன் அனுபவியாமல் நின்ற கன்மம். |

**பொ.சங்கரப்பிள்ளை விளக்கம்**

நூல் : சைவ சித்தாந்தம்

இவர் இலண்டனில் படித்துப் பல பட்டங்கள் பெற்றவர்.

வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள்... இவை முற்பிறவி விளைவு. அவற்றை அனுபவிக்கும் போதே மேலும் வினைகள் செய்கிறோம்... அவை சூக்கும உடம்பிற்கிடந்து, மறுபிறப்பில் பயிராகும்.

ஓர் ஆன்மா செய்த வினைப்பயன் அந்த ஆன்மாவைத் தவறாது சென்று பிடிக்கும்.

அனுபவித்துக் கழியும் வரைக்கும் வினைப்பயன் ஆன்மாவை விடாது தொடரும்.

**பழவினையை மாற்ற முடியாவிடினும் ஆகாமியம் எமது கையிலிருக்கிறது. ஆதலால் தனது வருங்காலத்தை ஆன்மாவே நிச்சயிக்கிறது.**

நாம் அனுபவிக்கும் துன்பமும் இன்பமும் நம் மன நோயைக் குணப்படுத்தும் மருந்துகளாகும்.

இன்பங்களுக்காகப் புண்ணியம் செய்வது வியாபாரமாகும். செய்த வினையின் பயனை நாம் அனுபவித்தே தீர வேண்டும்.

இறைவனை வணங்கினால் அவன் பாவங்களை மன்னித்து விடுவான் எனச் சிலர் எண்ணுகின்றனர். மன்னிப்புக் கேட்டுவிட்டு அதே பாவங்களைத்திரும்பத் திரும்பச் செய்கிறார்கள். கொள்ளையடித்த, களவெடுத்த காசில் ஒரு பங்கைக் கொடுத்தால் பாவம் மன்னிக்கப்படும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இக் காசில் கோயில் கட்டுகிறார்கள். குளங்கள் வெட்டுகிறார்கள். பூசைகள் செய்விக்கிறார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகிறார்கள்.

பூசாரிகளுக்கும் கோவில்களுக்கும் காசு கொடுத்து புண்ணியத்தை வாங்கலாம் எனச் சிலர் எண்ணுகிறார்கள். போரில் தமக்கு வெற்றியளிக்குமாறு இறைவனை வேண்டுகிறார்கள். களவெடுக்கப்போகுமுன் காளிக்குப் பூசை செய்கிறார்கள். சமயத்தின் பேரில் துவேஷங்களைப் பரப்புகிறார்கள். கொலை செய்கிறார்கள். சிலர் பாவ மன்னிப்புக் கொடுப்பதற்கு இவ்வுலகில் தம்மைத் தாமே இறைவனின் பிரதிநிதிகளாக நியமித்து விட்டனர். இவை யாவும் மோகங்களினால் உண்டான பேதை உணர்ச்சிகளாகும்.

தாபன மதங்கள் இவற்றைப் பயன்படுத்தி வியாபாரம் செய்கின்றன.

இவையாவும் சங்கரப் பிள்ளையின் சிறு நூலிலிருந்து, அப்படியே எடுத்துத் தரப்பட்டுள்ளன.

H.W.Schomerus - Saiva Siddhantha

சேமருசு என்ற செருமானியர், தம் தாய் மொழியில் எழுதி, ஆங்கில ஆக்கம் செய்யப்பட்ட நூல் மிகுந்த சிறப்புடையது. அவர் இவ்வினைக் கோட்பாடு பற்றித் தெளிவாக விளக்குகின்றார்.

No deed dies without generating fruit; consuming the fruit is unavoidable; they don't decay and you can't pass them on to someone else. Each soul must consume what it has sown. As one deed does not cancel another, a good does not make up for a bad one.

These two kinds of deed are built up by the thought words and actions. One deed is not destroyed by another. If you think carefully you can see that consumption is unavoidable.

Admittedly this same verse notes, with apparent approvel that in the Vaidiga - Saiva System one deed can replace another, i.e., by giving money for holding sacrifice. But no other text supports this suggection, so perhaps it was not the Siddhantins in general, but just Umapati, the brahmin of Chidambaram temple, who mentioned the value of spending money for ritual purposes (P.110).

செருமன் அறிஞர் கூற்று : செய்த வினையின் பயனை செய்த உயிர் அனுபவித்தே தீர வேண்டும். அதிலிருந்து தப்பிக்கவும் முடியாது, மற்றவர்க்கு மாற்றவும் முடியாது. நல்லது ஒன்று செய்து, தீமை செய்ததை மாற்றமுடியாது. (அதாவது ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டு, கும்பாபிசேகம் செய்வதால், முன்னதின் பாவத்தை மாற்ற முடியாது, இரண்டையும் தனித்தனியே அனுபவித்துத்தான் தீர வேண்டும் என்பது பிறிதொரு பெரியவர் கருத்து.)

ஒருவரது எண்ணம், சொல், செயலால் இருவினைகள் உருவாகின்றன. இவற்றுள் ஒன்றை வைத்து, மற்றதை அழிக்க முடியாது. செய்த வினையின் பயனைத் தவிர்க்கவே முடியாது.

ஆயினும் உமாபதி என்ற சிதம்பரம் பிராமணர் வைதிக சைவத்தில், பணம் செலவழித்து ஹோமம் முதலான சடங்குகள் மூலம் பாவத்தை நீக்கிக் கொள்ளலாம் என்று கூறுகிறார். (சிவப்பிரகாசம்) வேறு சிவ நெறியினர் எவரும் இவ்வாறு கூறவில்லை, இதுவே ஆங்கிலப் பகுதியின் சாரம்.

ஒரு வெளிநாட்டவர்க்கு இவ்வளவு தெளிவிருப்பது வியப்பே.

- ☐ எது நல்வினை எது தீவினை என்பதில் குழப்பமுண்டு நல்லதென நினைப்பது தீதில் முடியலாம்; தீயதென நினைப்பது நன்மையாக முடியலாம். பெரிதும் மனிதச் செயல்களில் நன்மையும் தீமையும் பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றன.
- ☐ ஒரு சிறைக் கைதி, தான் திருந்த நினைப்பதில் தவறில்லை. அது போலப் பாவகாரியங்கள் செய்தவர்கள், பரிகாரம் தேடுவது, மன அமைதி நாடுவது போன்றவற்றில் தவறில்லை. ஆனால் பணம் செலவழித்து, சடங்குகள் - ஹோமங்கள் செய்து தப்பிக்கலாம் என்பதும், புண்ணியம் தேடலாம் என்பதும் மிகைப்பட்ட ஆசையின் விளைவு. அதனையே புரோகிதர்களும் சோதிடம் பார்க்கும் தமிழர்களும் தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.
- ☐ பண்பாடு வேண்டும், நல்ல மனம் வேண்டும், எல்லோரும் பாராட்டும்படியான நற்பெயரெடுக்க வேண்டும். நல்லன செய்தே நன்மை அடையலாம். இவை மனத்தில் பதிய வேண்டும்.
- ☐ தீய எண்ணம், சொல், செயலால் ஏற்படும் எதிர்விளைவுகளைப் பணம் செலவழித்துப் போக்கிக் கொள்ளலாம் என்று புரோகிதர், சோதிடர், இராசி பலன் எழுதுபவர் ஆகிய மூவரும் பரப்புரை செய்த வண்ணம் உள்ளனர். இது இந்திய மனத்தின் ஆழ்நிலையில் பதிந்து, வழிவழியாகப் பெருகி வளர்ந்து, இந்திய நாடே குற்றச் செயல்களின் கொள்கலம் ஆகிவிடக் கூடும் என எச்சரிக்கவே, இவ்வினைக் கோட்பாடு நினைவூட்டப்படுகிறது.
- ☐ பகுத்தறிவுள்ள அந்தணருட்பட அனைவரும், நடுவுநிலையோடு சிந்தித்து, இவ்வினைக் கோட்பாடு பற்றி அனைவருக்கும் விளங்கும்படி செய்தால், சிறிதேனும் மக்கள் திருந்துவர். இன்றேல் "வாருங்கள், தப்பிக்கத் தான் நூறு வழியுளதே" என்று தீயவர்கள் தீமை செய்யத் தெம்பூட்டி விடுவதாகும்.

நல்லமனம் விளங்குக! மன மாசுகள் நீங்குக! தூய நல் வாழ்வுகள் துலங்குக! எல்லோரும் நல்வாழ்வு வாழ, நாம் - நல்லதையே நினைப்போம்; நல்லதையே பேசுவோம், நல்வழியிலேயே நடப்போம்!

**மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்** (குறள்.457)

❖ ஓர் உயிர் தான் செய்த வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும்.

❖ பணம் செலவழித்துப் பரிகாரச்சடங்குகள் செய்து, செய்த பாவத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது; அதுபோலக் கடவுளர்க்கு எனக் கோடி கோடியாகக் கொடுத்தும் புண்ணியத்தை வாங்க முடியாது.

❖ இறைவன் புண்ணிய வாணிகன் அல்லன். அவன் விரும்புவன உண்மை வாய்மை, நற்செயல், நற்பண்பு, நல்லெண்ணம்.

❖ புரோகிதர்களும் சாதகம் பார்ப்பவர்களும் இராசிபலன் எழுதுபவர்களும் ஒன்று செய்யலாம். கிரக தோசமா, களத்திர தோசமா, சென்மச் சனியா அனைத்துத் தோசங்களும் நீங்கப் பொது நன்மைகள் செய்யுங்கள் என எழுத வேண்டும்.

❖ கிராமங்களில் மருத்துவமனை கட்டுதல், அரசுப்பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுதல், ஏழை மாணவர்கள் படிப்புக்கு உதவுதல், கன்னிப் பெண்கள் திருமணத்திற்கு உதவுதல், ஏழைகளின் பசிபோக்குதல் என, இந்த இந்தத் தோசத்தை இந்த இந்த நற்செயல்கள் நீக்கும் என எழுத வேண்டும். நல்லது செய்யத் தொடங்கினால், மனம் தூயதாகும்; செயல்கள் நல்வழிப்படும். தான் படைத்த, தன் மக்களுக்குப் போய்ச் சேருமாறு, நல்லன பெருகப் பெருக இறைவன் மனம் மகிழ்ந்து, அனைத்துத் தோசங்களையும் நீக்கிப் புண்ணியங்களை அள்ளி அள்ளித் தருவான். உலகம் வாழ வழிகாட்டுவோமாக!